




# திராவிட மாடல் அரசு

101

ர.பிரகாசு

# மகிழ்வான அனுபவமாகும் மலையேற்றம்!

## இளையோரை ஈர்க்கும் 'டிரக் தமிழ்நாடு'

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

கண் சிமிட்டாமல் கணினி முன் இரவும், பகலும் மாறி மாறிப் பணிபுரியும் இன்றைய தொழில்நுட்ப யுகத்தில், இளைஞர்களின் பொழுதுபோக்கிற்கு ஆயிரம் வழிகள் இருந்தாலும், சுற்றுலாவும் பயணமும் அலாதியானவை. அதில் சாகச உணர்வையும் கூட்டித் தருவது மலையேற்றம் (டிரக்கிங்). வேலைப்பளு, பணிச்சூழல் சார்ந்து எழும் மன அழுத்தங்களுக்கான தீர்வாக, டிரக்கிங் செல்வதை வாடிக்கையாக்கி வருகிறது இன்றைய இளையதலைமுறை. ஆனால், இந்த டிரக்கிங் அனுபவம் அச்சத்தையும் ஆபத்தையும் உள்ளடக்கியது.

இருந்தாலும், அதன் மீதான ஈர்ப்பு குறைந்த பாடில்லை. சர்வதேச டிரக்கிங் சந்தையின் மதிப்பு லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி விட்டதாகப் புள்ளி விவரங்கள் சொல்கின்றன. ஆண்டுக்கு சராசரியாக 10 சதவிகிதத்திற்கு மேல் டிரக்கிங் சார்ந்த பொருட்களின் வணிகம் எகிறி வருகிறது. அந்த அளவுக்கு இன்றைய தலைமுறையைக் கவர்ந்திருக்கிறது டிரக்கிங்.

### முறைப்படுத்த முதல் முயற்சி!

வழிதவறிச் செல்வது, உரிய பாதுகாப்புக் கவசங்கள் இன்றிச் செல்வது, சட்டத்திற்குப் புறம்பாக அனுமதிக்கப்படாத பகுதிகளுக்குச் செல்வது, மலையேற்றத்திற்கான உடல் தகுதி இல்லாவிட்டாலும், ஆர்வத்தில் செல்வது போன்ற காரணங்கள்தான் டிரக்கிங் விபத்துகளுக்கும், உயிரிழப்புகளுக்கும் காரணமாக இருக்கின்றன. ஆக, உயிரிழப்புகள் தவிர்க்கக் கூடியதே. முறைப்படுத்த வேண்டியதும்கூட. அதற்கான முதல் விதையை விதைத்திருக்கிறது 'திராவிட மாடல் அரசு'.

தமிழ்நாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் மலைகள்-வனங்கள் ஆகியவற்றில், அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களில் அரசின் துணையோடு மலையேற்றப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான திட்டமாக 'டிரக்கிங் தமிழ்நாடு (தமிழ்நாடு மலையேற்றத் திட்டம்)' உருவாக்கப்பட்டுள்ளது.

வனத்துறையின் **'வன அனுபவக் கழகம்'** சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.10..2024 அன்று தொடங்கிவைத்தார். இதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ள www.trektamilnadu.com என்ற சிறப்பு இணையதளப் பக்கத்தையும் தொடங்கி வைத்தார்.

### மலையேற்றத் திட்ட சிறப்புகள்!



தமிழ்நாடு முழுவதும் 124 மலையேற்ற இடங்கள் வனத்துறையால் கண்டறியப்பட்டுள்ளன. அதில் 40 இடங்களில் மட்டும் இந்தப் பயணத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, விருதுநகர், மதுரை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், திருவள்ளூர் ஆகிய 14 மாவட்டங்களில் இந்த மலையேற்றப் பாதைகள் உள்ளன.

எளிய பாதை, மிதமான பாதை, கடினப் பாதை என 3 பாதைகளாக இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. மலையேற்ற வழிகாட்டிகளாக காடுகள் பற்றிய பாரம்பரிய அறிவைக் கொண்ட, ஐம்பதுக்கும் மேற்பட்ட பழங்குடியின மற்றும் வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மலையேற்ற தூரம், அந்தப் பகுதிகளைக் கணக்கில்கொண்டு ரூ.500 முதல் ரூ.5000 வரையில் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் எந்தப் பகுதியைத் தேர்வு செய்கிறார்களோ, அந்த மலைப்பகுதியின் தொலைவு என்ன, பயண கால அளவு, பார்க்கக்கூடிய வன விலங்குகள் என்ன, வழிகாட்டு நெறிமுறைகள் என்ன என்ற விவரங்கள் அனைத்தும் இணையதளப் பக்கத்தில் அளிக்கப்பட்டுள்ளன.

**மாற்றுக் கொண்டாட்ட அனுபவத்தை காலத்திற்கும் தரும் ஒரு திட்டமாகவும், மலையேற்ற அனுபவத்தை மகிழ்வானதாகவும் ஆக்குகிறது 'டிரக் தமிழ்நாடு'!**

### பாதுகாப்பான பயணம் உறுதி!

மலையேற்றம் மேற்கொள்பவர்கள் வலைத்தளப் பக்கத்தில் அவசியம் முன்பதிவு செய்ய வேண்டும். இணையவழிப் பணப்பரிவர்த்தனை மூலம் மலையேற்றத்திற்கான நுழைவுச் சீட்டினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 18 வயதிற்கு உட்பட்டவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஒப்புதல் கடிதத்துடன் மலையேற்றம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள் எளிதான மலையேற்றப் பாதைகளுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர். இவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் துணையோடு அனுமதிக்கப்படுவார்கள். இவ்வாறு பயணிகளுக்கான அனைத்து பாதுகாப்பு வசதிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மலையேற்றத்திற்குத் துணை நிற்கும் வனத்துறையின் வழிகாட்டிகளுக்கு சீருடைகள், பிரத்யேக காலணிகள், தண்ணீர் குடுவை, சுடுநீர் குடுவை, ஊன்று கோல், முதுகுப் பை, விசில், முதலுதவிப் பெட்டி, திசைகாட்டும் ஜி.பி.எஸ் கருவி, தொலைத் தொடர்பு கருவி உள்ளிட்ட மலையேற்றக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மலையேற்றத்துக்கு முன்பதிவு செய்வோர், அவரவர் உடல் வலிமைக்கு ஏற்ப தடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். உள்ளூர் வானிலை நிலவரம் அறிந்து, அதற்கேற்ற உடையில் வர வேண்டும். போதுமான குடிநீர், தீனி, தேவையான மருந்துகளை வைத்திருக்க வேண்டும். அவர்களுக்குத் துணிப்பை, தொப்பி, பேனா, பறவைகள் குறித்த கையேடு வழங்கப்படுகிறது. குறிப்பாக, மலையேற்றத்துக்கு வருவோருக்கு காப்பீடு செய்யப்படுகிறது.

பயணத்தின்போது இயற்கைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு அளிக்கப்படுகிறது. தாவரங்கள், பூக்களைப் பறிக்க அனுமதியில்லை. வன விலங்குகளுக்கு உணவளிக்கக்கூடாது. இதன்மூலம் வனம் மற்றும் வன உயிரினங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. கோவை மாவட்டத்தில் உள்ள பரலியார் வனப்பகுதியில் முதல் குழு மலையேற்றத்தைத் தொடங்கியது. அடுத்தடுத்த இடங்களில் மலையேற்றம் பாதுகாப்பான முறையில் தொடர்கிறது. சுற்றுலாப் பயணிகளிடத்திலும் அரசின் முன்னெடுப்புக்கு, பெரும் வரவேற்பு கிடைத்திருக்கிறது. நவம்பர் 1, 2, 3 ஆகிய 3 நாட்களில் மட்டும் 400 பேர் முன்பதிவு செய்து, மலையேற்றம் சென்றுள்ளனர்.


### மாற்றுக் கொண்டாட்டத்திற்கான வழி!

மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் உலகெங்கும் எண்ணற்ற கொண்டாட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றைத் தாண்டி மனிதம் வளர்க்கும் புதுப்புதுக் கொண்டாட்டங்களும் காலத்திற்கேற்ப முளைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. அத்தகைய புதுவிதமான கொண்டாட்ட அனுபவத்தை, தமிழ்நாட்டிற்கு கடந்த மூன்றரை ஆண்டுகளில் எக்கச்சக்கமாக வழங்கியிருக்கிறது, திராவிட மாடல் அரசு. **'ஹேப்பி ஸ்ட்ரீட்', 'கலைத் திருவிழா', 'உணவுத் திருவிழா', 'செஸ் ஒலிம்பியாட்', 'கார் பந்தயம்'** உள்ளிட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் என எண்ணற்ற புதுவிதமான கொண்டாட்ட அனுபவத்தை, திராவிட மாடல் அரசு தந்திருக்கிறது. அத்தகைய மாற்றுக் கொண்டாட்ட அனுபவத்தை காலத்திற்கும் தரும் ஒரு திட்டமாகவும், மலையேற்ற அனுபவத்தை மகிழ்வானதாகவும் ஆக்குகிறது 'டிரக் தமிழ்நாடு'!

**...சாதனை தொடரும்**

---

## 'மதம் கொண்ட மனிதன்'




'மதங்கள் மனிதர்களின் வரலாற்றை எப்படி மாற்றின' என்பதை விளக்கும் நூலாக உருவாகியுள்ள 'மதம் கொண்ட மனிதன்' நிகர்மொழி பதிப்பக வெளியீடாக, சென்னை புத்தகக் காட்சியில் விற்பனைக்கு வந்துள்ளது. பெரும்பாலான மக்கள் தற்காலத்தில் மதங்களின் மீது கொண்டுள்ள நம்பிக்கைகளை ஒட்டி, பல்வேறு தலைப்புகளில் அறிவியல்பூர்வமாக, தனது பார்வையை முன்வைத்துள்ளார் நூலாசிரியர் ஸ்வாதிகா.

மனித வாழ்வின் முக்கிய அம்சமாகப் பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் மதங்கள் உருவான விதம், அவற்றின் வளர்ச்சிப் பாதை, வழிபாட்டு வடிவங்கள், மதச் செயல்பாடுகளால் சமூகத்தில் ஏற்பட்ட விளைவுகள், மதங்களைக் கேள்விக்குள்ளாக்கிய விஞ்ஞானம் மற்றும் பகுத்தறிவு வாதங்கள் என பல முனைகளில் இருந்து ஆராய்ச்சிக் கோணத்தில் எழுதப்பட்டிருக்கிறது இந்நூல். மிக முக்கியமாக, மத நம்பிக்கையைப் புரிந்துகொள்வதில், மதச் சிந்தனையாளர்கள் எப்படி மாறுபட்டு இருந்தனர் என்பதையும், இந்நூல் எடுத்துச் சொல்கிறது.

எழுத்தாளரின் முதல் நூல் இது என்று நம்ப முடியாத அளவுக்கு ஆச்சரியம் தரக்கூடிய வகையிலும், ஆணித்தரமாகவும் அவரது வாதங்களும், பார்வைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மற்றவர்களிடம் மண்டியிடுவது நம் மண்ணின் பண்பாடு, பக்தி, மரியாதை, கலாச்சாரம் எனப் பின்பற்றப்பட்டு வருகிறது. அறிவியல்பூர்வமாக இதனால் பயன் ஏதும் இல்லை என நிறுவும் எழுத்தாளர், உளவியல் ரீதியாக, உங்கள் மனதை வீழ்த்தும் உத்திதான் இது என்று விளக்கும் பாங்கு கவரச் செய்கிறது.

நூலின் விலை: ரூ.300

தொடர்பு எண்: 84284-55455

---

## ஃப்ளாஷ்பேக்



### மறக்க இயலாத தருணம்!



கே.கண்ணதாசன்

1994-ஆம் ஆண்டு, மே மாதம் 24-ஆம் தேதி எனது திருமணத்தை, கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையேற்று நடத்தி வைத்தார். ஏலகிரியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்குத் தலைவருடன் அண்ணன் ஆற்காடு வீராசாமி, இன்றைய கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்களும் வருகை தந்து, எங்களை வாழ்த்தினர். மகிழ்வான இந்தத் தருணத்தை எப்போதும் மறக்க இயலாது.

**– கே.கண்ணதாசன்,**
**முன்னாள் ஒன்றிய துணைச் செயலாளர்,**
**ஜோலார்பேட்டை ஒன்றியம்,**
**திருப்பத்தூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

---

## கருவூலம்

### 'பெரியார் பிறவாதிருந்தால்!'

1981-ஆம் ஆண்டு நவம்பர் ஒன்றாம் தேதி சேலம் மாவட்டம், ஆத்தூரில் தந்தை பெரியார் சிலையைத் திறந்து வைத்தார், முத்தமிழறிஞர் கலைஞர். அப்போது நடைபெற்ற கூட்டத்தில் 'பெரியார் பிறவாதிருந்தால்' என்ற தலைப்பில் கலைஞர் உரையாற்றினார். 'பெரியார் இன்று சிலையாக இருக்கிறார். எண்ணிப்பாருங்கள், அவர் தோன்றாமல் இருந்திருந்தால், தமிழ்ச் சமூகத்திற்கு அவர் பணி இல்லாது போயிருந்தால், அவருடைய போராட்டம் நடைபெறாமல் இருந்திருந்தால் தமிழன் இன்றைக்கு எவ்வளவு தலை தாழ்ந்திருப்பான்?' என உருக்கமாய் இருந்தது, கலைஞரின் உரை.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

705

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.